**இந்தியத் துணைத் தூதரகம்**
**யாழ்ப்பாணம்**

**ஊடக அறிக்கை**

யாழ். இந்திய துணைத் தூதரகமானது மகாத்மா காந்தியின் 152வது பிறந்த நாளை இன்று (2 அக்டோபர் 2021) கொவிட் -19 சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி கொண்டாடியது.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் அவர்கள் யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் உள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

வடக்கு மாகாண சபையின் மாண்புமிகு அவைத் தலைவர் திரு. சீ.வி.கே.சிவஞானம், யாழ். மாநகர முதல்வர் மாண்புமிகு வி.மணிவண்ணன், யாழ்ப்பாணம் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் அகில இலங்கை காந்தி சேவா சங்க உதவி செயலாளர் செல்வி சி.சிவரம்யா அவர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்வுகளின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

**02 ஒக்ரோபர் 2021**
**யாழ்ப்பாணம்**